# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)
## மூன்றாவது நினைவுப் பேருரை



# பேராசிரியர் நந்தியின் புனைகதைகளில் ஈழப் பின் காலனியச் சமூகம்



வீ.அரசு
பேராசிரியர் – தலைவர்
தமிழ் இலக்கியத்துறை, சென்னை பல்கலைக்கழகம்
சென்னை

03.10.2011

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி) மூன்றாவது நினைவுப் பேருரை

## பேராசிரியர் நந்தியின் புனைகதைகளில் ஈழப் பின் காலனியச் சமூகம்


**வீ.அரசு**
பேராசிரியர் - தலைவர்
தமிழ்இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

## கட்டியம்

மேதகு துணைவேந்தர் அவர்களுக்கும் பல்கலைக்கழகத்தின் பிற நிர்வாகத்தினர்க்கும் எனது அன்பான வணக்கம். பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் அவர்கள் நினைவில் உருவாக்கப் பட்டுள்ள இப்பேருரையை நிகழ்த்த வாய்ப்பளித்தமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன். இப்பேருரையை நிகழ்த்த மூலகாரணமாக அமைபவர் நண்பர் தேவானந்த். அவருடைய அன்பிற்கு நன்றி. இப்பேருரை நிகழ்த்த நந்தியின் நூல்களை எனக்குத் தேடிக்கொடுத்த வர்கள் நண்பர் க.குமரன் மற்றும் தேவானந்த்.

மருத்துவராகச் செயல்பட்ட பேராசிரியர் நந்தி அவர்களின் புனை கதைகளைப் பற்றி உங்களோடு உரை யாடுவதில் பெரிதும் மகிழ்கிறேன். மீண்டும் நன்றி. வணக்கம்.

## பேராசிரியர் நந்தியின் புனைகதைகளில்
## ஈழப் பின் காலணியச் சமூகம்

*பின்காலனியத்துவம் அதன் சொந்த அறிவுத் தளங்களில் இருந்து தொடங்குகிறது. நீண்ட காலனிய எதிர்ப்பு இயக்கங்களின் ஊடாக வளர்ந்து சமீப காலமாக விளக்கம் பெற்றுவரும் அறிவுகளின் தொகுப்பாக உள்ளது...... பின்காலனியத்துவம் அல்லது முக்கண்டவாதம், இத்தகு விளிம்புநிலை மக்களின் கிளர்ச்சி மிக்க அறிவுக்கானப் பொதுச் சொல். நாம் வாழும் உலகின் நியாயங்கள் மதிப்பீடுகளை மாற்ற விரும்புவதுதான் அதன் தேடல். நீங்கள் இதனை எங்கிருந்து வேண்டுமானாலும் கற்கலாம். இப்படிப்பைத் தொடங்கத் தேவையான ஒரே தகுதி நீங்கள் உலகை மேலிருந்து பார்க்காமல் கீழிருந்து பார்க்க வேண்டும் என்பது மட்டும் தான். (ராபர்ட் ஜே.சி.யங்.பின்காலனியம் 2007:24 மொழியாக்கம் அ.மங்கை)*

ஆசிய நாடுகள் காலனிய ஆட்சியிலிருந்து விடுபட்டு சனநாயகம் எனும் பெயரில் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளும் சூழல் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் உருவானது. ஆசிய நாடுகளில் இனமுரண்பாடு, காலனிய ஆட்சிக்காலத்தில் மௌனப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மொழி, நிலம் ஆகியவை சார்ந்த இன அடையாளங்களும் உருபெறாத சூழல் இருந்தது. காலனிய நிர்வாகம் அகன்றபின், மொழி, நிலம், சொத்து ஆகியவை தொடர்பான புதிய தன்மைகள் படிப்படியாக உருப்பெறத்தொடங்கின. இந்தியாவில் வடக்கு - கிழக்கு மற்றும் வடமேற்கு (காஷ்மீர்) என மொழி மற்றும் இனம் சார்ந்த முரண்பாடுகள் கூர்மையுற்றன. ஆனால், அவை இராணுவ அதிகாரத்தால் முடக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 1940 - 1960 இடைப்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட 'தனித்தமிழ்

நாடு' எனும் முழக்கத்தை இந்த அடிப்படையில் புரிந்து கொள்ளலாம். இந்தியாவில் இன்றும் வடகிழக்குப் பகுதிகளில் வாழும் பெரும்பகுதியான மக்களின், தொடர்ந்த போராட்டத் தையும் இப்பின்புலத்தில்தான் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவைப் போலவே இலங்கைத் தீவிலும் காலனிய நிர்வாகத்தின்பின் தொடர்ச்சியான இன முரண்பாடுகள் குறித்த நிகழ்வுகளை எதிர் கொள்கிறோம். இம்முரண்கள் உள்ளிருக்கும் சமூகத்தின் சாதிய மற்றும் வர்க்கமுரண்களாகவும் மலையகத்தில் குடியேறிய தமிழர்களை அலைக்கழித்துவரும் முரணாகவும் வடிவமுற்றிருப்பதைக் காண்கிறோம்.

1956களிலிருந்து இலங்கைத் தீவில் சிங்களவர், தமிழ் - மொழி பேசுவோர் என்ற முரண் படிப்படியாக வளர்ச்சியுற்று, இன்று அத்தன்மை புதிய பரிமாணத்தில் செயல்படுவதைக் காண்கிறோம். பொருளாதாரச் சூழல், பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றில் காலனியத்திற்குப் பிற்பட்ட காலம் என்பது பல்வேறு புதிய தன்மைகளை உள்வாங்கியிருப்பதைக் காண்கிறோம். இத்தன்மைகள் குறித்தப் பதிவுகள் பல்வேறு வடிவங்களில் செயல்படுகிறது.

காலனியத்தின் மூலம் கிடைத்த நவீனக் கல்வியின் பட்டறிவைப் பெற்றவர்கள், பின்-காலனியச் சமூகம் குறித்த விமர்சன பூர்வமானப் பதிவுகளைச் செய்துள்ளனர். செய்து வருகிறார்கள். காலனியக் கல்வி அல்லது ஆங்கில மொழிவழிக் கல்வி பெற்ற அறிவுஜீவிகள் காலம் ஏறக்குறைய முடிந்துவிட்டது என்று கூறமுடியும். 1930 களில் பிறந்து 1950 களில் செயல்படத் தொடங்கியோர் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் முதுமை யுற்று மறைந்து போகின்றனர். பின்-காலனியக் காலக் கல்விமுறை மூலம் வளர்ந்தவர்களே இப்பொழுது பெரும்பான்மை யாக செயல்பட்டுவருகின்றனர். காலனியச் சமூகத்தில் பிறந்து பின் - காலனியச் சமூகம் குறித்து பதிவு செய்தார்கள்; பின் - காலனியக் காலத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் இந்தச் சமூகம் குறித்த பதிவுகளைச் செய்வது வருகிறார்கள். இதில் அடிப்படை யான வேறுபாடுகளைக் காணமுடிகிறது. நவீனத்துவம் எனும் கருத்துநிலை மூலம் பெற்ற புதியபார்வைகள், இச்சமூகம் குறித்தப்புரிதலில் புதிய தன்மைகள் உருப்பெற்று வருவதைக்

காட்டுகிறது. பின் - காலனியச் சமூகம் குறித்தப் பதிவுகள் புனைகதைகளில்தான் விரிவாகப் பதிவு செய்யப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் இலங்கைத்தீவில் வாழும் தமிழ்மொழி பேசும் மக்கள் தொடர்பான பின்-காலனியக் காலச் சமூக நிகழ்வுகளாகப் பின்கண்டவற்றைத் தொகுத்துக் கொள்ளலாம்.

- பதினெட்டாம் நூற்றாண்டு முதல் இலங்கைத்தீவில், தென்னிந்திய நிலப்பகுதிகளிலிருந்து குடியமர்த்தப் பட்டார்கள். இவர்களில் பெரும்பான்மை மக்கள் தமிழ்மொழி பேசுபவர்களே. காலனியத்தால் உருவாக்கப்பட்டவர்கள். பின் - காலனியக் காலத்தில் இச்சமூகம் அவர்களை எவ்விதம் எதிர்கொள்கிறது என்பது தொடர்பான உரையாடல்கள்.
- தமிழ்ச்சமூகங்களில் இடம்பெற்றுள்ள ‘சாதி’ எனும் மனநிலையின் சமூகப் பொருளாதார அமைப்புநிலை ஆழமாக வேர்கொண்டுள்ளது. நவீனத்துவக் கருத்துநிலைப் புரிதல் உருவான சூழலில், இத்தன்மை குறித்த விமரிசனங்கள் முன்வைக்கப்படுதல் என்பது இயல்பானது. பின் - காலனியக் காலத்தில் இத்தன்மை யின் பல்பரிமாணங்கள் குறித்த உரையாடல்கள்
- மொழிசார்ந்த இன அடையாளங்கள் உருப்பெற்ற சூழல், பின் - காலனியச் சமூகத்தில் உருப்பெற்றது. இனங்கள் தங்களுக்குள் சுமுக உறவுநிலையைப் பேண இயலாத அவலம் உருப்பெற்றுள்ளது. இனங்கள் என்பவை பொருளாதார அலகுகளால் நிர்ணயிக்கப் பட்டவை அன்று. அவை பண்பாட்டு அடிப்படையில் அலகுகளைக் கொண்டவையே. எண்ணிக்கை சார்ந்து பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை எனும் சமூக எதார்த்தம் நடைமுறையில் உள்ளது. வர்க்க மற்றும் சாதி அடையாளங்களை அழித்தே இன அடையாளம் செயல்படுகிறது. இத்தன்மை தொடர்பான உரையாடல்கள்.

மேற்குறித்த தன்மைகள் புனைகதைகளில் பதிவுசெய்யப்பட்டுள்ள முறைமைகள் குறித்த விரிவான ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்றுள்ளதாகக் கூறமுடியவில்லை. புனைகதைகள் குறித்த வரலாற்று வகைப்பட்ட தகவல் தொகுப்பு முறைமை நிகழ்ந்த

அளவிற்கு அவைகளில் பேசப்பட்டிருக்கும் பல்வேறு நிகழ்வுகளின் கருத்து நிலை சார்ந்த உரையாடல்கள் குறைவாகவே நிகழ்ந் துள்ளன. அவை உருவாகிக் கொண்டிருந்த சூழலில், அதனை நிகழ்த்தும் சாத்தியமும் குறைவே. இந்த நூற்றாண்டில் தான், அதற்கான மன அவகாசம் உருப்பெற்றுள்ளது. ஒவ்வொரு ஆக்க இலக்கியக்காரரின் ஆக்கங்களில் மேற்குறித்த உரையாடல்களை நிகழ்த்த வேண்டிய தருணம் உருப்பெற்றிருப்பதாகக் கூறலாம்.

மருத்துவராகச் செயல்பட்ட பேராசிரியர் நந்தி அவர்களின் புனைவுகளில் மேற்குறித்தவை எவ்வகையில் தொழிற்பட்டுள்ளன? என்ற உரையாடல் அவரை மீள்நினைவுப்படுத்துவதாக அமையும். மேலும் அவரது பார்வைகளின் பரிணாம வளர்ச்சிகளையும் அவதானிக்க இயலும். தான் வாழ்ந்த காலத்தில் தன்னைச் சுற்றி நடைபெற்ற நிகழ்வுகளை தனது கண்ணோட்டத்தில் பதிவு செய்துள்ளார் பேராசிரியர் நந்தி. மலையகம், வடகிழக்குப் பகுதி, தென்னிலங்கை எனும் பூகோள அலகுகளில் அமைந்திருக்கும் இத்தீவின் மலையகம் மற்றும் யாழ்குடாப்பகுதி சார்ந்த பதிவுகளை நந்தி செய்துள்ளார். தமது புனைவுகளுக்கானக் களமாக அவர் கொண்டிருந்த மக்கள், காலனியக் காலத் தன்மையிலிருந்து வேறுபட்ட ஈழத்தின் பின் - காலனியக் காலத்தில் வாழ்ந்த/வாழும் சமூகமாக நாம் புரிந்துகொள்கிறோம். இந்தச் சூழலில் உருவான புதிய தன்மைகளை நந்தி எவ்வகையில் உள்வாங்கினார் என்பது தொடர்பான உரையாடல்களே நமது நோக்கமாக அமைகிறது. அவரது புனைகதைகளில் இத்தன்மைகள் இடம் பெற்றிருக்கும் பாங்கு சார்ந்து, நமது புரிதலுக்காகப் பின்வரும் வகையில் பகுத்துக் கொள்ள இயலும்.

- தோட்டத் தொழிலாளர்களான மலையக மக்களை, தமது புனைவுகளில் விரிவாகப் பதிவுசெய்துள்ளார். யாழ்ப்பாணத் தமிழர், மலையகத் தமிழர்கள் குறித்துப் பதிவு செய்வதை தனித்தே மதிப்பீடு செய்ய வேண்டும். நந்தியின் இப்பதிவுகளில் காணப்படும் பல்வேறு கூறுகளை, இன்றைய நிகழ்வுகளோடு நாம் இணைத்துப் பார்க்கவேண்டும்.

- யாழ்ப்பாணத் தமிழரின் வாழ்முறைகள் குறித்தப் பதிவுகளே இவரது முதன்மையான பதிவுகளாகச் சொல்ல இயலும். யாழ்ப்பாண குடாநாட்டின் இரு கிராமங்கள் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நிலப்பகுதி களை அடிப்படையாகக் கொண்டு தமது புனைவு களைச் செய்துள்ளார். இப்புனைவுகளில் வெளிப்படும் பல்வேறு கூறுகள் குறித்து உரையாடும் தேவையுண்டு.

- பேராசிரியர் நந்தி அவர்களின் 1980க்குப்பிற்பட்ட ஆக்கங்களில், இனமுரண்பாடுகள் சார்ந்த கலகங்கள் குறித்து விரிவாகப் பதிவு செய்துள்ளார். தாம் வாழும் காலத்தை மறந்து , கற்பனைப் புனைவுகளில் தம்மை அவர்பெரிதும் ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. சிங்கள பேரினவாத செயல்பாடுகளை புனைகதைகளில் நந்தி அவர்கள் பதிவாக்கியுள்ள கூறுகள் குறித்தும் விரிவாகப் பேசவேண்டிய தருணம் இதுவாகும்.

பேராசிரியர் நந்தியின் புனைகதைகள் குறித்த உரையாட லைத் தொடங்குவதற்குமுன், பின்-காலனியக் காலச் சமூகம் குறித்த உரையாடலுக்கு 'பின்காலனியத்துவம்' எனும் கோட்பாடு எவ்வ கையில் உதவுகிறது என்பதை நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

*தேசிய விடுதலைப் போராட்டங்கள், அவற்றின் முன்னெடுப்புகள், போதாமைகள், அரசியல் விடுதலை பெற்றபின் கைமாறிய அதிகாரங்கள், காலனிய நவீன மாற்றங்களை மீறித் தொடரும் நிலவுடைமை சாதிய, மத, பாலின ஒடுக்குமுறைகள், காலனிய நவீனம் சாத்தியமாக்கி யுள்ள உடைப்புகள், இச்சமூகங்களின் உட்கூறுகளில் இருந்து மேற்கிளம்பும் புதிய போராட்டங்கள், மாறிவரும் உலகமயமாக்கலால் இத்தேசங்களில் ஏற்படும் சிதைவுகள், உருமாற்றங்கள், இந்தேசங்களுக்குள் நடக்கும் இனப் போராட்டங்கள் என்று பின்காலனிய சமூகங்களின் வரலாறுகள் சிக்கல்கள் மிகுந்தவையாக மாறியுள்ளன. இந்தப் பின்னணியில், பின்காலனியத்துவத்தை முக்கண்டம் சார் அரசியலாக; ஆப்பிரிக்க, ஆசிய, இலத்தீன்-*

*அமெரிக்கக் கண்டங்களின் அரசியல்சார்ந்து அணுகும் முறையை யங் இந்நூலில் வெளிப்படுத்துகிறார் (அ.மங்கை, பின்காலனியம்: மிகச்சுருக்கமான அறிமுகம், மொழி பெயர்ப்பாளர் குறிப்பு : 2007)*

பேராசிரியர் நந்தியின் புனைகதைகளை மேற்குறித்த வரலாற்றுப் பின்புலத்தில் அணுக இயலும். அவருடைய முதல் நாவலான மலைக்கொழுந்து (1964) மூலம், காலனியம் உருவாக்கிய தோட்டங்கள்; பின் - காலனியக்காலத்தில் எவ்வகையில் செயல்படுகின்றன என்ற புரிதலைத் தருவதாக அமைகிறது. 'மலைக்கொழுந்து' நாவல் எழுதிய பின்புலத்தை நந்தி பின்வருமாறு பதிவு செய்கிறார்.

*"1959 ஆம் ஆண்டில் நான் 'குறுக்குவழி' என்ற ஒரு சிறுகதையை எழுதினேன். டிக்கோயாவின் தேயிலைத் தோட்டம் ஒன்றில் மிக அழகான ஒரு பெண்ணைப் பார்த்த பின்பும் அந்தத் தோட்டத்தின் தொழிலாளர் சங்கத் தலைவனான ஓர் அறிவுமிக்க வாலிபனுடன் அரைமணி நேரம் உரையாடிய பின்பும் அழகு, அறிவு இவற்றைப் பசுமையான இளமையின் பின்னணியில் நான் காதலிக்க வைத்த முயற்சி தான் அந்தக் கதை.*

*நாவலப்பிட்டி ஆத்மஜோதி இல்லத்தில் அன்புமணி, திரு.நா.முத்தையா அவர்களுக்குக் 'குறுக்குவழி'யைப் படித்துக் காட்டினேன். 'இந்தக் கதையில் புனிதமான காதல் இருக்கிறது. இதை நீங்கள் ஒருநாவலாக எழுதினால் நன்றாக இருக்கும்' என்ற ஆலோசனையைத் தெரிவித்தார் அன்புமணி. நாவல் என்ற சொல்லுடன் என்னைப் பிணைத்த அன்பு அவருடையதுதான்.*

*இரண்டு வருடங்களாக பல தேயிலைத் தோட்டங்களுக்குப் போய் வந்தேன். 'குறுக்கு வழி' என் மனத்தில் நெடுவழியாகிக் கொண்டே வந்தது. அந்தப் பாதையின் ஓரத்தில் பல அழகான பெண்களும் அறிவுள்ள ஆண்களும் நிற்காமல் இல்லை....*

*1961இல் 'குறுக்குவழி' வளர்ந்து 'மலைக்கொழுந்து' ஆனது. இந்த இடைக்கால அனுபவத்தின்பின் என் புனை கதையில் கர்மம், குரோதம், கல்வியின்மை, ஒற்றுமைக் குறைவு, முதலாளித்துவம் இவற்றினால் காதல் பாதிக்கப் பட்டிருந்தால் அல்லது பின்னணிக்கு ஒதுக்கப்பட்டிருந் தால் அது எனது குற்றமல்ல. இந்த நாவலைப் படிப்பதன் மூலமே எனது மனப்போராட்டத்தையும் சிந்தனையையும் நீங்கள் தெரிந்து கொள்ள முடியும். இந்த முகவுரை அதற்கு ஒரு குறுக்கு வழியாக அமையும் என நான் கருதவில்லை. (மலைக்கொழுந்து, 1964:3,4)*

நந்தி அவர்கள் அதனை ஒரு காதல் கதையாக சொன்னாலும் காதலையும் மீறித் தோட்டத் தொழிலாளர் சுரண்டலும் அதற்கு எதிரான அவர்களது போராட்டமும் அந்நாவலில் பதிவு செய்யப் பட்டுள்ளது. நந்தி அவர்கள் மலையகத் தமிழர்கள் குறித்துச் செய்துள்ள பதிவுகளைப் பின்வரும் வகையில் தொகுத்துக்கொள்ள முடியும்.

- 1951 - 1970 காலகட்டம் தோட்டத் தொழிலாளருக்கு இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கேட்டுப் போராடிய காலமாகும். அவர்களுக்கு முழுமையான பிரதிநிதித்துவம் வழங்காமல், வெறும் நியமன அங்கத்துவத்தை இலங்கை அரசு இக்காலங் களில் வழங்கியது. குடியுரிமை வழங்குவது தொடர் பான சிக்கல்களும் கூர்மையடைந்த காலம் இது. 1964ஆம் ஆண்டில்தான் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவிற்குத் தோட்டத் தொழிலாளிகளைத் திருப்பி அனுப்பத் தொடங்கினர். இந்தப் பின்புலத்தில் இந்நாவலை எழுதியதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

- மலையகத் தோட்டத் தொழிலாளர்களாகிய தமிழர்களை, யாழ்ப்பாணத் தமிழர்கள் நடத்திய முறை தொடர்பான பதிவுகளை தமது புனைகதைகளில் விரிவாகப் பதிவு செய்துள்ளார். யாழ்பாணத்தமிழர் ,

மலையகத் தமிழர்களை இவ்வகையில் பதிவு செய்திருப்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நந்தி அவர்களின் *'மலைக்கொழுந்து'* நாவல் குறித்து அந்நாவலின் கதாநாயகன் எழுதும் கடித வடிவில் அமையும் பகுதி பின்வருமாறு அமைகிறது. இதன் மூலம் தமது மலைக்கொழுந்து குறித்து அவரே செய்துள்ள பதிவாக இதனைக் கருதலாம்.

> *இது என்னுடன் கூடி வாழும் வள்ளி, வீராயி, காத்தான், ரங்கசாமி மாமா, சிதம்பரக் கங்காணி, மீனாட்சிப் பாட்டி முதலிய பல தோட்டத் தொழிலாளர்களாகிய எங்களின் கதை. அவர்களிலே பலர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; சிலர் இப்போது என் நினைவில் மட்டும் வாழ்கிறார்கள். ஆனால், இந்த எழுத்துக்களிலே பிறந்து உங்கள் மத்தியில் என்றும் வாழப்போகிறார்கள்.....*
>
> *எங்கள் இருவரது பரம்பரையும் ஒருவரை ஒருவர் மாறி மாறி வாழவைக்கின்றது. இந்தக் கதையை எழுதியிருக்க வேண்டியவன் நான். ஆனால், எழுதவில்லை. அதற்கான காரணங்களை நான் நண்பர் மயில்வாகனத்திற்கு எழுதிய கடிதத்தில் காட்டியுள்ளேன். இதை நீங்கள் விரைவில் படித்து அறிந்துகொள்வீர்கள். (மலைக்கொழுந்து, 1964:9,10)*

மலைக்கொழுந்து நாவலில், உழைக்கும் தொழிலாளருக்கும் அவர்களது உழைப்பைச் சுரண்டும் கங்காணிகள் மற்றும் முதலாளிகளுக்குமான முரண்களை 'காதல்கதை' எனும் பின்புலத்தில் காட்டியுள்ளார். தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி, அதில் தென்னிந்தியப்பகுதிகளிலிருந்து உழைப்பாளர்களைக் கொண்டு வந்து கொழுத்த இலாபத்தைக் காலனிய ஆட்சியாளர்கள் பெற்றனர். உலகத்தின் மிக முக்கியமான அந்நியச் செலவாணி வருமானம் தரும் பொருளாகப் பின்காலனியக் காலத்தில் உருவாவதற்கான அடிப்படைகளை காலனிய ஆட்சியாளர்களும் காலனிய முதலாளிகளும் உருவாக்கி வைத்தனர். காலனிய அதிகாரம் கைமாறிய பின்பு, காலனிய

முதலாளிகளின் இடத்தை நம்மூர் கங்காணிகள் பெரிதும் கைப்பற்றிக்கொண்டனர். ஆசிய நாடுகளில் உருவான புதிய முதலாளிகளின் ஆளுகைக்குட்பட்டதாக தோட்டங்கள் இருந்தன. மலைக்கொழுந்து நாவலில் முதலாளியாக வடிவம் பெறும் பாத்திரம், ஒரு காலத்தில் தோட்டத் தொழிலாளியாக இருந்தவனே. இவ்வகையில் பின்காலனியச் சமூகத்தில் சுரண்டல் முறை கைமாறும் காட்சியை இந்நாவல் விரிவாகப் பதிவு செய்திருப்பதைக் காணலாம். இதனை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் பகுதி அமைகிறது.

> *மகாராஜன் தான், சீமையிலிருந்து வந்து தோட்டத்தில் குதித்தவனா? ஒருகாலம் கூலியாக இருந்தவர்களின் வாரிசுதானே. அவன் அப்பா, தலவாக்கொல்லை எலிசபெத் எஸ்டேட்டில் ஒரு கணக்கப்பிள்ளை. அங்கே தகப்பனுக்குத் துரையாக இருக்க விரும்பாமல், மகாராஜன் மாணிக்க மலைத் தோட்டத்திற்கு வந்து சரியாக ஒரு வருடம் பூரணமாகிவிட்டது. என்றாலும், 'கண்ணன் தீராத விளையாட்டுப்பிள்ளை' என்ற ரீதியில் மலைகளில் தனது அல்சேஷன் நாயுடன் உலாவிவரும் மகாராஜன் தோட்ட நிர்வாகத்தின் அரைக்கால்வாசியையாவது புரிந்து கொண்டான் என்று கூற முடியாது. நிர்வாகத்தை ஓரளவு திருப்தியாக கொண்டு செல்வதற்குக் கண்டக்டர், டீமேக்கர், டிஸ்பென்சர், ஹெட்கிளார்க் முதலியோரின் அனுபவச்சரக்கு, அவனுக்கு மிகவும் வேண்டியிருந்தது. அவனுக்குப் புத்திதானம் செய்பவர்களும் இதை நன்கு அறிந்திருந்தனர். வேண்டிய நேரங்களில் அவனுடைய உதவிகளை வட்டியும் குட்டியுமாக வாங்கி அனுபவித்தார் கள். (மலைக்கொழுந்து, 1964:103)*

இந்நாவலில் போராட்ட உணர்வுடைய தொழிலாளர் வர்க்கம் உருப்பெறும் வரலாற்றை மிக விரிவாகப் பதிவு செய்கிறார். காலனியக் காலத்தில் தொழிற்சங்கம் என்பது இல்லை. அதற்கான அனுமதியும் வழங்கப்படவில்லை. தொழிற்சங்கம் உருவாக்கம் என்பது பின்காலனியச் சமூகத்தில் உருவான நவீனத்தன்மைகளின் விளைவால் உருப்பெற்ற விளைவாகும். சனநாயகத்தன்மை,

சமஉரிமை, அடிமைமுறை ஆகியவற்றிற்கான எதிர்வினை, படிநிலைச்சமூக அமைப்பை ஏற்காமை ஆகியவை பல்வேறு நவீனக் கருத்தாக்கங்கள் ஆகும். இத்தன்மை மலையகத் தமிழர்களிடம் உருப்பெற்றத் தன்மையை *மலைக்கொழுந்து* மூலம் நந்தி பதிவு செய்திருக்கின்றார்.

மலையகம் எனும் சொல்லாட்சி இலங்கைத் தீவில்தான் பெரும்பான்மையாகப் புழக்கத்தில் இருப்பதைக் காண்கிறோம். தமிழகத்திலும் மலையகப்பகுதிகள் உண்டு. அங்கு வாழும் மக்கள் தேயிலைத் தோட்டப் பணியில் தான் முதன்மையாக ஈடுபட்டுள்ள னர். சமதளப்பகுதியிலிருந்து குடியேறியவர்களும் இலங்கைத் தீவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களும் என சுமார் மூன்று இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இதனைப் போலவே மலேசியாவின் மலைப்பகுதிகளில் இரப்பர் தோட்டத் தொழிலாளர்களாக தமிழர்கள் வாழ்ந்தனர்/வாழ்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் இருக்கும் பொதுப்பெயர் *தோட்டத் தொழிலாளர்கள்* என்பதாகும். மலைப்பகுதி சார்ந்த தட்பவெப்பச் சூழலில்தான் இம்மூன்று நாடுகளிலும் இம் மக்கள் வாழ்கிறார்கள். மூன்று நாடுகளிலும் இம்மக்களைப் பற்றிய ஆக்கங்கள் உருப்பெற்றுள்ளன. நாவல்கள், சிறுகதைகள் எனும் புனைகதைகள், கவிதைகள், நாடகங்கள், நாட்டார் பாடல்கள், ஆவணப்படங்கள், திரைப்படங்கள் எனப் பல்வேறு ஆக்கங்கள் உருப்பெற்றுள்ளன. இதனைத் தமிழர் அலைவு உழல்வியல் (Tamil Diaspora) சார்ந்து 'மலையகத் தமிழ் ஆக்கங்கள்' என்று அடையாளப்படுத்தலாம். இலக்கிய உரையாடல்கள், பண்பாட்டு உரையாடல்கள், பொருளாதார உரையாடல்கள் ஆகியவற்றில் 'மலையகத் தமிழர்' எனும் சொல்லை மூன்று நாடுகளுக்கான பொதுச் சொல்லாகப் பயன்படுத்தலாம். இதன் மூலம் தமிழரின் 'அலைவு உழல்வை' அடையாளப்படுத்தலாம். இவ்வகையான பதிவை அறிந்து கொள்ள உதவும் ஆக்கமாக நந்தி அவர்களின் 'மலைக்கொழுந்து' நாவல் அமைந் துள்ளது. மிகைப்படுத்தப்பட்ட காதல் காவியமாக அது கருதப் பட்டாலும் அதனையும் மீறிய மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகம், அதுவும் பின் - காலனியக் கால / இன்றைய தோட்டத் தொழிலாளர்கள் நம் மனத்திரையில் விரிவாக

வருகின்றனர். இவ்வகையில் மலையகத் தமிழுக்கு நந்தி அவர்களின் பங்களிப்பை பதிவு செய்ய முடிகிறது.

பிரித்தானியர்கள் காலத்தில், இலங்கைத் தீவின் மலையகத் தோட்டத் தொழிலாளர்களாக, தென் இந்தியப்பகுதியிலிருந்து வந்தவர்கள் எவ்வகையான நிலையான சொத்துக்களும் இல்லாதவர்கள். தாங்கள் குடியிருக்கும் மனையே அவர்களுக்குச் சொந்தமன்று. நிலமற்ற ஏழைமக்களாகிய இவர்கள் பெரும்பகுதி ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். இவர்களது சாதி ஒடுக்கு முறையும் சொத்தற்ற மனநிலையும் கண்காணா தேசங்களுக்குக் கூலிகளாகச் செல்லும் மனநிலையை உருவாக்கியது.

இவ்விதம் இலங்கைத்தீவின் மலைப்பகுதிகளில் குடியேறிய மக்களை, யாழ்ப்பாண வெள்ளாளச் சமூகம், தீண்டத்தகாதவர் களாகவே கருதியது. அவர்களை தீண்டத்தகாத அடிமைகளாகவே கருதி அவர்களது உழைப்பைச் சுரண்டுவதற்கு முற்பட்டனர். இதன்மூலம் யாழ்ப்பாணப் பகுதியில் 'சிற்றாள்' பணிக்கு அவர்களைத் தெரிவு செய்தனர். இவ்வகையில், மலையகத் தமிழர்களை யாழ்ப்பாணம் மக்கள் நடத்தும்முறை குறித்த விமரிசனப் பதிவுகளை நந்தி தமது சிறுகதைகளில் செய்துள்ளார். *'தங்கச்சியம்மா'*(1977) *'நம்பிக்கைகள்'*(1989) ஆகிய அவரது இரு நாவல்களிலும் இவ்வகையான பதிவுகளைக் காணமுடிகிறது. இந்தியத் தமிழர்கள் பொருளாதாரத்தில் வளமாக இருந்த போதிலும் அவர்களுடன் மணஉறவு வைத்துக்கொள்வதை யாழ்ப்பாண வெள்ளாளச் சமூகம் மறுத்ததை தமது புனைகதைகளில் நந்தி பேசுகிறார். இதன்மூலம் சாதியக் கட்டுமானத்துடன் செயல்படும் யாழ்ப்பாணச் சமூகத்தை நமக்குக் காட்டுகிறார்.

பேராசிரியர் நந்தி, மேற்குறித்தவாறு இலங்கைத்தீவின் தொழிலாளர்களைப் பதிவு செய்ததின் மூலம் பின் - காலனியச் சமூகம் தொடர்பான அவரது புரிதலை அறியமுடிகிறது. பல்வேறு தருணங்களில் அவரது புனைகதைகளில், பல்வேறு பரிமாணங்களில் தோட்டத் தொழிலாளர் சமூகத்தைப் பரிவுடன் பதிவுசெய்வதைக் காண்கிறோம். சமகால வரலாற்றுப் பிரக்ஞை

உடையவராக இவ்வகையில் அவரைக் கருதமுடிகிறது. தமது தங்கச்சியம்மா(1977) நாவலின் தலைமைப் பாத்திரமான தங்கச்சியம்மாவை, சமூக சேவைமிக்கவராகவும் தனக்கு உதவியவர்களை என்றும் மறக்காத நன்றியுணர்வு உடையவராகவும் காட்டுகிறார். இவர் ஒரு மலையகத் தமிழர் என்பதையும் குறிப்பிடவேண்டும். மலையகத் தமிழர்களை மிகு எதார்த்தப் போக்கில் புனைகதைகளில் இடம்பெறச் செய்துள்ள நந்தி அவர்களின் அணுகுமுறை, யாழ்ப்பாணத் தமிழர் - மலையகத் தமிழர் என்ற முரண்களை கடக்க அவர் முயலும் மனநிலையைக் காணமுடிகிறது. இவர் நாவல் எழுதிய காலங்களில் பெரிதும் சிக்கல்களுக்கு உள்ளாக்கப்பட்ட மலையகத் தமிழர்களை பரிவுணர்வுடன் முன்னிருத்துகிறார். அன்றைய வரலாற்றுச் சூழலில் இத்தன்மை பெரிதும் கவனம் கொள்ளத் தக்கதாகும்.

யாழ்ப்பாணச் சமூகம் சாதிய அதிகாரப் படிநிலைச்சமூகம் ஆகும். இதனைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்வரும் வகையில் தெளிவுபடுத்துகிறார்.

> *இச்சமூகம், ஒரு சமூக அதிகாரப் படிநிலை முறைமையினை (Social hierarchy) உடைய ஒன்றாகும். அதாவது, மேலேயுள்ளது உயர்ந்தது, படிப்படியாகக் கீழே வரும்பொழுது கீழேயுள்ளது தாழ்ந்தது என்ற ஒரு எடுகோள் இங்கு உண்டு.*
>
> *இந்தப் படிநிலை, சாதியமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். சாதி ஆய்வினை மேற்கொள்ளும் பொழுது, சாதிகளின் பட்டியலையும் அவற்றின் அதிகாரப் படிநிலைகளையும் பற்றி அறிந்து கொள்வது மாத்திரம் போதாது. இந்தச் சாதிகள் ஒவ்வொன்றும் தத்தம் சமூக உறவுகளில் ஒன்றிணைந்து எவ்வாறு ஒரு சமூக அமைப்பினை (caste as a social system) உருவாக்கியுள்ளன என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். கால மாற்றங்களுக்கேற்ப அமைப்பு மாற்றங்களும் ஏற்பட்டு வந்துள்ளன என்பதை நாம் மனதிருத்திக் கொள்ளல் அவசியமாகும்.*

ஆரம்பத்தில் சாதியே சகல சமூக உறவுகளையும் நிர்ணயிக்கின்ற சக்தியாக விளங்கிய ஒரு நிலையிலிருந்து இப்பொழுதோ விவாகத்திலும், சமூகச்செல்வாக்கு அதிகாரத்திலுமே சாதி முறைமையின் தொடர்ச்சியைக் காணலாம். விவாகம் என்பது குடும்ப உருவாக்கத்துக்கு (family formation) அச்சாணியாக அமைவதாலும் குடும்பம் எமது சமூகத்தின் மிக முக்கியமான அலகான படியினாலும் (இது பற்றிச் சற்றுப் பின் நோக்குவோம்) சாதி இன்னும் அச்சாணியான ஓர் இடத்தையே பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தின் சாதியமைப்பில் சில விசேட பண்புகள் உள்ளன (சிவத்தம்பி 1989). முதலாவது இங்கு, தமிழகத்திலுள்ளது போன்று பிராமண மேலாண்மை இல்லை. சடங்காசாரமாக நோக்கும் பொழுது பிராமணர்கள் சைவக்குருக்கள்மார் முதலிலே வைத்துப் பேசப்படும் மரபு உண்டெனினும் உண்மையான சமூக அதிகாரம் வெள்ளாளரிடமேயுண்டு. இந்த வெள்ளாள மேலாண்மை காரணமாக இன்னொரு கருத்துநிலையும் வளர்ந்ததள்ளது. வருண அடிப்படையில் வேளாளரும் சூத்திரரே. சூத்திரரே இறுதிக் குழுமத்தினர். இந்த இக்கட்டு நிலையிலிருந்து விடுபடுவதற்காக, இங்கு சூத்திரரை இரு வகையாக வகுத்து நோக்கும் ஒரு முறைமையுமுண்டு. அவை:

1. சற்சூத்திரர்

2. அசற் சூத்திரர்

சற்சூத்திரர் என்போர் உயர்ந்தோர். இந்தக் கொள்கையினை யாழ்ப்பாண மட்டத்தில் மிகவும் வற்புறுத்தியவர் ஆறுமுக நாவலர் ஆவார். (பிரபந்தத்திரட்டு)

மேலும் சற்சூத்திரரின் மேலாண்மைக்கு ஒரு கருத்துநிலை முக்கியத்துவம் வழங்குவதற்காக, வருண தர்மத்திலே பேசப்படாத இன்னொரு குழுமத்தைப் பற்றி (ஐந்தாவது வருணத்தைப் பற்றி) அழுத்திப் பேசவேண்டிய

*நிலையேற்பட்டது. "பஞ்சமர்" என்னும் கோட்பாடு யாழ்ப்பாணத்திற் சமூக வன்மையுடைய ஒன்றாகும். (யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்து நிலை, 2000: 28,29)*

*'நம்பிக்கைகள்'* (1989) நாவலில், பல்வேறு சாதிக் குழுக்களிலிருந் தும் மருத்துவம் பயிலும் மாணவர்களைப் பாத்திரங்களாக உருவாக்கியுள்ளார். இவர்கள் மத்தியில் நிலவும் சாதியம் தொடர்பான மனஉணர்வுகளை நாவலின் அடி-இழையாக கட்ட முயன்றுள்ளார். யாழ்ப்பாணம் சமூகத்தின் சாதிய படி-நிலைகளைப் புரிந்துகொள்ள உதவுவதாக இந்நாவல் அமைகிறது. மருத்துவக் கலைச்சொற்கள் இந்நாவலில் மிகுதியாகக் இடம்பெற்றுள்ளன. மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகளை நிகழ்விடமாகக் கொண்டு நாவல் அமைகிறது. மருத்துவத் தொழிலை, மக்களுக்கான தொண்டூழியமாகக் கருதும் மனநிலை உடையவராக, இந்நாவலை உருவாக்கியுள்ளார். இதில்வரும் மாணவர்கள், காலனியத்திற்குப் பிந்தையான நவீன சமூக நிகழ்வுகளின் எடுகோள்களாக அமைகின்றனர். மூன்றாம் உலகநாடுகளில் ஐரோப்பியர்களின் அலோபதி மருத்துவ முறையைக் கைக்கொண்டவர்கள் தனிவர்க்கம் அல்லது தனிச்சாதியாக உருப்பெறுகிறார்கள். இந்த நாடுகளில் உள்ள ஏழ்மை இவர்களது வருமானத்திற்கான மூல ஆதாரமாக அமைகிறது.

மக்களின் அறியாமை, அலோபதி மருத்துவத்தொழில் செழிக்க உதவுகிறது. பின்காலனியத்துவக் கோட்பாடு சார்ந்து, விளிம்புநிலை மக்களின் மிகப்பெரும் அரக்கனாக அலோபதி மருத்துவம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்தன்மை பின் - காலனியச் சமூகத்தில் உருவானது. ஆசிய நாடுகளில், மிகப்பெரும் தொழிலாக வடிவம் பெற்றுள்ளது. இதில் கிடைக்கும் கொள்ளை இலாபம் வேறெந்த தொழிலிலும் இல்லை. அண்மைக் காலங்களில் கல்வி வணிகமும் இத்தன்மை நோக்கி வளருகிறது. மருத்துவர் நந்தி அவர்கள், பின் - காலனிய மருத்துவத் தொழில் பற்றிய பிரக்ஞை உடையவராக இருந்தார்; அதனால்தான் எளிய மொழியில் இம்மருத்துவத்தினைப் பற்றிச் சிறிய சிறிய நூல்களை

அதிகமாக எழுதினார். பிற்காலத்தில் அவர் நம்பிய சாயிபாபா இயக்கத்தில் மருத்துவ உதவியையும் கல்வியையும் முதன்மைப் படுத்தினார்.

பின் - காலனியம் கண்டுபிடித்த அலோபதி மருத்துவ முறைக்குள்ளிருந்து, அதனை உடைக்கும் மனநிலை இவருக்கு இருந்தது. இதனையே அவரது இரு நாவல்களும் (தங்கச்சியம்மா - 1977, நம்பிக்கைகள் - 1989) பேசுகின்றன. இப் புனைவுகளில் அவர் முன்னிறுத்தும் தன்மைகளைப் பின்வரும் வகையில் தொகுக்கலாம்.

- மருத்துவத்தொழில், பொருளாதாரப் படிநிலையில் மேல்தட்டுக்குச் செல்ல வழிகாணுகிறது. இவ்வகையில் செயல்படுபவர்கள் மருத்துவத் தொழில் பயிலும் காலத்தில் சனநாயகப்படுத்தப்பட்ட மனநிலையில் செயல்படுகின்றனர். பின்னர் அவர்கள் மருத்துவத் தொழிலில் ஈடுபடும்போது, தமது சாதிய உணர்வுத் தளங்களை மீள்கட்டமைப்பு செய்கின்றனர். நவீன அறிவு அவர்களது சாதியத்தை உடைக்கவில்லை.
- மருத்துவத் தொழில் அடிப்படையில் மனிதர்களுக்கு செய்யும் தொண்டு. இது வணிகமல்ல. மருத்துவர்கள் அல்லது மருத்துவத்தோடு தொடர்புடையவர்கள் அனைவரும் சேவை மனநிலை உடையவர்களாக அமைய வேண்டும்.

பல்வேறு சிறுகதைகள், இரு நாவல்கள் ஆகியவற்றை மேற்குறித்தக் கண்ணோட்டப் பின்புலத்தில்தான் எழுத முயன்றுள்ளார். மலையகம், யாழ்ப்பாணச் சமூகம் ஆகியவை குறித்தப் பதிவுகளைச் செய்த நந்தி 1980 - 2005 இடைப்பட்ட காலங்களில் ஈழநாட்டில் நடந்த இனப்போர் தொடர்பாகவும் விரிவாகப் பதிவு செய்துள்ளார். இலங்கைத்தீவின் இத்தன்மை குறித்த பின்கண்ட பதிவை நாம் கவனத்தில் கொள்வது அவசியம்.

*இந்துத்துவ இயக்கம், அண்டைநாடான இலங்கையின் வரலாற்றைப் பின்பற்றுகிறது. 1956 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பொதுத் தேர்தலில் பெரும் வெற்றி அடைந்த பின் 'சிங்களருக்கு மட்டும்' எனத்*

*தொடங்கிய வாதம் சிறுபான்மைத் தமிழருக்கு எதிரான உள்நாட்டு யுத்தத்தின் பிடியில் இன்னமும் சிக்குண்டு நிற்கும் வரலாறு அது. இலங்கை, தேசம் என்ற அடிப்படையில் ஒருமுகப்படுத்தப்பட்ட பின்னர் எழுந்த சிக்கல் இது. மேலைநாட்டவர்கள் மத்தியில் எப்போதும் நிலவும் ஊகம் மேலைய சனநாயக அமைப்புதான் உலகின் எல்லா நாடுகளுக்கும் பொருந்தக் கூடிய சிறந்த அமைப்பு என்பதாகும். ஆனால் வரையறுக்கப்பட்ட, வெவ்வேறு இனக்குழுக்கள் கொண்ட நாடுகளின் நிலைமை வேறு. பெரும்பான்மை இனக்குழு, சனநாயக ஒப்புதலோடு சர்வாதிகாரத்தையும் ஒடுக்குமுறையையும் கட்டவிழ்த்து விடக்கூடிய அமைப்பாக அந்நாட்டு சனநாயகம் அமைந்து விடக்கூடும். அத்தகு நாடுகளில் சிறுபான்மை இனத்தவருக்குப் பெரும்பான்மை இனத்தவரின் கொடுமையை எதிர்க்க சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் வழிமுறைகள் இல்லை. அத்தகு நாடுகளின் பெயர்களை நீங்கள் பட்டியலிடலாம். (ராபர்ட் ஜே.சி.யங்: பின்காலனியம். மிகச் சுருக்கமான அறிமுகம், 2007:77 மொழியாக்கம் அ.மங்கை)*

சிங்களப் பேரினவாத செயல்பாடுகளை தமது புனைவுகளில், ஒரு தமிழனாக நின்று நந்தி புனைந்துள்ளார். 'பதுங்குகுழி' எனும் அவரது சிறுகதையில் பின்வரும் பகுதி அமைகிறது ...

*அந்த இனக்கலவரங்களின் ஆழமான நினைப்பு செல்லத்துரைக்கிழவனின் மனத்தில் நியாயமான சிந்தனையைத் தோற்றுவித்தது. இப்போது நடைபெறுவது கிழவனுக்கு ஒரு போராகவே தோன்றியது. ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்குமிடையே அது நடைபெறுகிறது. போரைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது, அவருக்குப் புரியாதது; அந்த வாரங்கள், அந்த வருடங்கள். 1956 முதல் 1983 வரை போர் இல்லை. ஆயுதம் தாங்கிய தமிழ்ப் போராளிகள் இருக்கவில்லை.*

*'அந்தக் காலத்திலை காந்தி வழியில் சத்தியாக்கிரகம் நடந்தது.'*

*'அரசியலிலே உரிமைகள் கேட்டு எனது தலைவர்கள் சமரசப் பேச்சுக்குப் போனார்கள்'.*

*ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. கிழவனுக்கு அரசியல் விடயங்கள் தெளிவான மனப்பாடம். ஆனால் அந்தக் காலத்தில் கலவரங்கள் மூண்டன. பெறுமதியில்லாத நிகழ்வுகள், அயலவர் மனஸ்தாபம், தனிப்பட்ட வியாபாரப் போட்டி பொறாமை, காம விவகாரம் - யார் குற்றவாளி யாக இருந்தாலும் கலவரத்தை உண்டாக்கியது. அந்தக் கலவரங்கள் காட்டுத் தீயும் சுழல் காற்றும் சேர்ந்தது போல் பரவும்; தொட்டம் தொட்டமாக, பரவலாக, திடீர் திடீரென, கொடூரமாக தமிழர் பாதிக்கப்படுவர். செல்லத் துரைக் கிழவனின் நெஞ்சு விம்மியவாறு ஒரு நிமிடம் நிலை கொண்டது.*

*'வடக்கும் கிழக்கும் எமது பதுங்குகுழிகள்'*

*ஒவ்வொருவராக பதுங்கு குழியிலிருந்து வெளிவந்தார் கள். உடலில் இருந்த மண்ணைத் தட்டிக்கொண்டார்கள். செல்லத்துரைப் பாட்டா மீண்டும் கூறினார்:*

*'இந்த மண் எமக்குச் சொந்தமில்லை என்றால்; நாங்கள் பதுங்குவதற்கும் இடமில்லை'*

*'கோப்பி குடிக்க, வா அப்பு' என்று செல்லமணி அவரை அழைத்தாள். (நந்தியின் சிறுகதைகள்:2011:230,231)*

இவ்வகையில் ஈழநாட்டில் நடைபெறும் போரினால் நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் குறித்தப் பதிவுகளை, தமது புனைகதைகளில் கொண்டு வந்துள்ளார். போர்க் காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்த நந்தி, தன்னைப் போன்றவர்களின் குடிபெயர்வை ஏற்பவராக இல்லை. தமது சிறுகதைகள் பலவற்றிலும் 'நம்பிக்கைகள்' நாவலிலும் குடிபெயர்ந்தவர்களை விமர்சனம் செய்கிறார். போரினால் குடிபெயர்ந்த ஈழத்தமிழ்ச் சமூகம் குறித்தப் பேராசிரியர் கா.சிவத்தம்பி பதிவை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

இப்பொழுது நடைபெறும் பெருமளவிலான புலப்பெயர் வானது உண்மையிற் சில அடிப்படையான சமூகக் காரணங்களுக்காகவே நிகழ்கின்றது என்பதை மறந்து விடுதல் கூடாது. இந்த அமைப்பினுள் அவர்கள் பெறவிரும்பும் மேனிலைப் பெயர்வசைவினை இந்தச் சமூகத்தின் பௌதீக பிரதேசத்தில் வைத்து செய்ய முடியாதிருப்பதாலும் மேனிலைப் பெயர்வசைவினால் வரும் சௌகரியங்களை அநுபவிக்க முடியாதிருப்பதாலும் இந்த அமைப்புக்கு வெளியே சென்று அவற்றைத் துய்ப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கையே இன்றைய அடிநிலை. இடைநிலைச் சமூகமட்டத்துப் புலப்பெயர்வுகள் என்பதை நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும் . புலம்பெயர்ந்த பின்னர் தமது தற்போதைய சௌகரியங்களை தமக்கே அர்த்தப்படுத்திக் கொள்வதற்கானப் புலம்பெயர்ந்துள்ள இடங்களில், தாம் விட்டு வந்த சமூக பண்பாட்டுச் சூழலை மீள் உருவாக்கம் (Reproduce) செய்ய விரும்புகின்றனர். இந்த மீள் உருவாக்கத்துக்கான பௌதீக வாய்ப்புகளைப் (பண்பாட்டு, பயன்பாட்டுப் பொருட்களை, நடவடிக்கை களை) பெறுவதற்கு நவீன தொழில்நுட்ப சாதனங்கள் உதவுகின்றன. இந்த மீள் உருவாக்கத்தில் கருத்து நிலைக்கு முக்கிய இடமுண்டு. ஆனால் சிக்கல் யாதெனில் இந்த மீள் உருவாக்கத்தை இவர்கள் அங்கு மேலாண்மையுடன் நிலவும் கருத்துநிலை வட்டத்துக்குள்ளேயே செய்ய வேண்டும். இதனால் இந்த மீள் உருவாக்கம் ஒரு நாற்று நடவாக (Transplanting) அமைய இடமே இல்லை. அடுத்த தலைமுறை அந்தப் பண்பாட்டினுள் உள்வாங்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும். அதே வேளையில் அங்கு இவர்களது சமூக பேணுகைக்கும் மேலாண்மை பண்பாட்டின் உள்வாங்குதலுக்குமிடையே தத்தளித்து இறுதியில் இரண்டும் கெட்டான் ஆகிய ஒரு உடன் பாடாகவே முடிய வேண்டிய நிலை (Creolization) ஏற்படலாம். (யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்து நிலை, 2000:45)

மேலே குறித்த வகையில் அமைந்துள்ள ஈழத்தமிழர்களின் மனநிலை பேராசிரியர் நந்தி அவர்களின் ஆக்கங்களில் இடம்பெறுவதின்மூலம், பின்காலனிய ஈழத் தமிழ்ச்சமூகத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. பின்காலனியத்துவம் முன்னிருத்தும் மண்இழப்பு, அகதி வாழ்க்கை, விளிம்புநிலை வாழ்வு ஆகிய பல்வேறு கூறுகளின் கொள்கலமாக ஈழத் தமிழ்ச்சமூகம் உருப் பெற்றுள்ளது. இதற்கான அடுத்த கட்ட நகர்வை நாம் பொறுத் திருந்துதான் பார்க்கவேண்டியுள்ளது. பேராசிரியர் நந்தியைப் புரிந்துகொள்ள பேரா.கா.சிவத்தம்பி தரும் படப்பிடிப்பு உதவுகிறது. அவரது புனைகதைகளை வாசித்த எனது மனநிலையும் அவ்வகையில்தான் இருந்தது. அப்பதிவு பின்வருமாறு,

*நந்தியின் இலக்கிய முக்கியத்துவம் பற்றிப் பேசுவதல்ல எனது நோக்கம். நந்தியின் பெயரைக் குறிப்பிடாது 20 ஆம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய வரலாற்றை எழுதிவிட முடியாது என்பது உண்மை. ஆனால், எனக்கு இங்கு முக்கியமாகப்படுவது அந்த மனிதனின் உள்ளப் பண்பாடாகும்.*

*ஆத்மாவும் உள்ளமும் இணைகின்ற நிலை அது. நந்தி என்ற எழுத்தாளரிடத்து குறைபாடுகளை நாம் காணலாம். உண்மையில் குறைபாடுகளும் உண்டு. ஆனால், நமக்கு முக்கியமாவது என்னவென்றால் புலமை ஞானமும் அறிவுப் பரப்பும் ஆழமும் தொழின்மை நிதானமும் கொண்ட ஒருவரிடத்து இந்தப் படைப்பாக்கத்திறன் இணைகின்றபோது அந்த மனிதன் பாற்கடல் போலே நம்முன் விரிகிறான். அவன் எழுத்துக்களும் அறிவும் அனுபவமும் இணைகின்றபோது வண்ண ஆக்கங்கள் வெளிப்படத் தொடங்குகின்றன. இலக்கியத் துறையில் நந்திக்கு ஒரு கருத்து நிலை இருந்தது. சிவஞான சுந்தரம் கொம்யூனிஸ்ட் அல்ல. ஆனால் அவர் முற்போக்கு எழுத்தாளராக இருந்தார். முற்போக்கு இலக்கிய எழுத் தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைக்குச் சிலகாலம் தலைவராக இருந்தார். மு. போ. எ. சங்கத்தின் நடவடிக் கைகள் சிலபற்றிய சமூக விமர்சனங்கள் வந்தபோது அவற்றிற்குத் துணிச்சலுடன் முகம் கொடுத்தார்.*

நந்தியின் இந்தக் கருத்து நிலைத் துணிபு அவரது ஆழுமைக்கான ஒரு திறவு கோலாகும். நந்தியின் அறிவுக்கும் புலமைக்கும் சமூகத் திசை முகம் ஒன்று இருந்தது. அது வெறும் அறிவு அல்ல. சமூகக் குவிவு உடைய ஒரு தேடல் முயற்சி. (இறப்பு என்பது முடிவல்ல : 2005:11,12)

**உதவிய நூல்கள்**


1. அருணாசலம்.க. இலங்கையின் மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, 1999.

2. சுப்பிரமணியன்.நா. ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, 2009

3. சாரல்நாடன்: மலையகத் தமிழர் வரலாறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2011

4. சிவத்தம்பி. கா., யாழ்ப்பாணம் - சமூகம், பண்பாடு, கருத்துநிலை, குமரன் புத்தக இல்லம் - கொழும்பு - சென்னை, 2000

5. ராபர்ட் ஜே.சி.யங், பின்காலனியம் :மிகச் சுருக்கமான அறிமுகம், மொழியாக்கம் அ.மங்கை, அடையாளம். புத்தாநத்தம் - தமிழ்நாடு, 2007

6. பேராசிரியர் நந்தியின் நாவல்கள் மலைக்கொழுந்து 1964, தங்கச்சியம்மா 1977, நம்பிக்கைகள் 1989, 47 சிறுகதைகள்



1928 - 2005

## பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம்

- பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சமூக மருத்துவப் பேராசிரியராகவும், பீடத்தின் தலைவராகவும் இருந்தவர். பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியராகவும் இருந்தார்.

- அவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பட்டதாரி (1955). பின்பு லண்டன் பல்கலைக்கழகத்தில் பொதுச் சுகாதார டிப்ளோமாவும், Phd (Epidemiology) பட்டமும் பெற்றார். 1995 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு D.Sc பட்டமளித்துக் கௌரவித்தது.

- இலங்கை சுகாதார அமைச்சின் வைத்திய சாலைகள், சுகாதார அலுவலகங்களில் பத்து வருட காலம் சேவை செய்தபின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 14 வருடங்கள் சமூக மருத்துவ விரிவுரை யாளராகவும் இணைப் பேராசிரியராகவும் கடமையாற்றினார். அதன்பின்பு 1979 இல் யாழ். மருத்துவப் பீடத்தின் முதலாவது பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

- உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுகாதார முறை ஆய்வின் ஆலோசகராக இந்தியா, ஜோர்தான், சிம்பாவே, மலேசியா, வங்காளதேசம், வடகொரியா, மொங்கொலியா, மியன்மார் ஆகிய நாடுகளில் கடமையாற்றியுள்ளார்.

- அவர் பல சமூக, மருத்துவ ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர். உலகின் பல மருத்துவ கருத்தரங்குகளில் பங்குபற்றிய வர். அவர் 1999 இல் மருத்துவ மாணவர், மருத்துவர்களுக்காக எழுதிய Learning Research என்ற பாடநூல் மருத்துவ சமூகத்தின ரால் போற்றப்படுகின்றது.

- தமிழ் எழுத்து உலகில் அவர் "நந்தி" என்ற புனைபெயரில் மிகவும் அறியப்படுபவர். மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, நம்பிக்கைகள், ஆகிய நாவல்களையும் 50 சிறுகதைகளும் எழுதி யுள்ளார். இரு நாவல்கள் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவை.

எளிய மக்களுக்கு நான்கு சுகாதார நூல்கள், சிறுவர் களுக்கு அறிவுரை நூல்கள், நாடக நூல் என அவரது 14 நூல்கள் வெளிவந்துள்ளன.



வீ.அரசு (1954)

| | | |
|---|---|---|
| தற்போதைய பணி : | - | பேராசிரியர் - தலைவர்,<br>தமிழ் இலக்கியத்துறை,<br>சென்னைப் பல்கலைக்கழகம். |
| நிர்வாகப் பணி : | - | ஆசிரியர் பணி 26 ஆண்டுகள்,<br>(பேராசிரியப்பணி -12 ஆண்டுகள்) |
| | - | ஆட்சிக்குழு உறுப்பினர் - 3 ஆண்டுகள் |
| | - | கல்விக்குழு உறுப்பினர்-12 ஆண்டுகள், |
| | - | பேரவை உறுப்பினர் - 12 ஆண்டுகள் |
| ஆய்வுப் பணி : | - | ஆய்வு மேலாளர்<br>முனைவர் பட்டம் பெற்றவர்கள் 35,<br>செய்து கொண்டிருப்பவர்கள் 10,<br>ஆய்வியல் நிறைஞர் பட்டம்<br>பெற்றவர்கள் 125, |
| ஆய்வு : | - | ஆய்வு நூல்கள் Monograph -2<br>ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு -4,<br>பதிப்பு நூல்கள் - 9,<br>மொத்த நூல்கள் - 15 |
| ஆய்வுக் கட்டுரைகள் : | - | ஆய்விதழ்களில் வெளிவந்த<br>கட்டுரைகள் - 34, நூல்<br>தொகுதிகளில் இடம்பெற்ற<br>கட்டுரைகள் - 44<br>ஆங்கிலக் கட்டுரைகள் -7,<br>பிற - 23,<br>மொத்த கட்டுரைகள் - 108. |
| கருத்தரங்கு / மாநாடு : | - | வட்டாரம் - 16,தேசீயம் - 8,<br>அகிலஉலகம் - 21<br>மொத்தம் - 45 |
| அயலகப் பயணம்: | - | கல்விப்பணி தொடர்பாகப் 14<br>நாடுகளுக்குப் பயணம் செய்தமை. |

| | | |
|---|---|---|
| 2011 | - | மலேசியா,சிங்கப்பூர் |
| 2009 | - | இத்தாலி, இய்கிலாந்து,<br>செக்கஸ்லோவேகியா |
| 2007 | - | கனடா |
| 2008 | - | ரஷ்யா |
| 2004 | - | நெதர்லாந்து |
| 2003 | - | சுவிட்ஸர்லாந்து, ஜெர்மனி,<br>பிரான்ஸ், டென்மார்க் |
| 2003, 2001 | - | இலங்கை |
| 1996 | - | நேபாளம் |

அச்சமைப்பு : மதி கலர்ஸ் நல்லூர்.
0212229285 COLOURS